2020-ம் வருடம் மார்ச் மாதம் 18-ம் தேதி புதன் கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகளின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.த.சௌந்தரராஜன்.பி.ஏ.,
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

1. இந் நகராட்சியின் 2019-2020-ம் ஆண்டின் திருத்திய வரவு, செலவு திட்டம் மற்றும் 2020-2021-ம் ஆண்டிற்கான உத்தேச வரவு,செலவு திட்டம் தயார் செய்து பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.013/பி2/2019
தீர்மான எண்.29:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

2. இந் நகராட்சியில் 2019-2020ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கீழ் குறிப்பிட்டுள்ள பணியை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டு வரப்பெற்றுள்ள மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்.அ2/3394/2019 நாள்.11.02.2020-ஐ தகவலுக்கு வைக்கப்படுகின்றது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ருபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | ஆம்பூர் நகராட்சி பி.கஸ்பாவில் எண்.17 பொது விநியோக நியாய விலைக்கடை கட்டிடம் கட்டுதல் | 9.60 |

மேற்படி பணிக்கு 06.03.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ருபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருமதி | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | ஆம்பூர் நகராட்சி பி.கஸ்பாவில் எண்.17 பொது விநியோக நியாய விலைக்கடை கட்டிடம் கட்டுதல் | 9.60 | 1.எஸ்.அருணாசலம்<br>2.ஏ.வி.நாகரராஜன் | 0.07% மதிப்பீட்டைவிட குறைவு<br>1.25% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலகக்குறிப்பு: அ. பதிவு செய்யலாம்.
ஆ. மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் எஸ்.அருணாசலம், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.
ந.க.எண்.1054/2019/இ1
தீர்மான எண்.30:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

3. இந் நகராட்சிக்கு 2019-20-ஆம் ஆண்டு 14-வது மத்திய நிதிக்குழு மான்ய திட்டத்தின் (14th CFC) கீழ், எடுத்துக்கொள்ளப்பட்ட சிமெண்ட் சாலைகள் அமைத்தல் பணிகளுக்கு 28.01.2020-ல் இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் ஒவ்வொரு சிப்பத்திற்கும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர்களின் தொழில் நுட்ப தகுதியினை ஆய்வு செய்யப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை விவர ஒப்பந்தப் புள்ளிகளை (PRICE BID) 24.02.2020-ம் தேதி அன்று திறப்பு செய்யப்பட்டது. தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்கள் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்வருமாறு பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| சிப்பம் எண் | பணியின் விவரம் | ஒப்பந்தப் புள்ளி தொகை (ருபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் திருவாளர்கள். | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 09 நதிசீலாபுரம் பகுதி, கே.எம். நகர் 1வது தெரு, 2வது தெரு மற்றும் 3வது தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 43.50 | 1. ஏ.வி.நாகராஜன்<br>2.கே.ஜி.தீனதயாளன் | 4.81% மதிப்பீட்டை விட அதிகம்<br>5.00% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | வ்ார்டு எண்.8 மற்றும் 9 ஆயிஷா பீ நகர் 2வது தெரு, 3வது தெரு மற்றும காஜா நகர் 1வது தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 44.50 | 1.கே.ஜி.தீனதயாளன்<br>2. ஏ.வி.நாகராஜன் | 4.94% மதிப்பீட்டை விட அதிகம்<br>5.15% மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | வாார்டு எண்.8, 9 மற்றும் 28 கே.எம். நகர் 4வது தெரு, காஜா நகர் 2வது தெரு மற்றும் நடராஜபுரம் மாரியம்மன் கோயில் தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 31.00 | 1.எம்.தீனதயாளன்<br>2.ஏ.வி.நாகராஜன்<br>. | 4.84% மதிப்பீட்டை விட அதிகம்<br>5.02% மதிப்பீட்டை விட அதிகம் |
| 4 | வார்டு எண்.8 பன்னீர் செல்வம் நகர் 2வது தெரு, 3வது தெரு, 4வது தெரு மற்றும் 5வது தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 44.00 | 1.கே.ஜி.தீனதயாளன்<br>2. ஏ.வி.நாகராஜன் | 4.91% மதிப்பீட்டை விட அதிகம்<br>5.17% மதிப்பீட்டை விட அதிகம் |
| 5 | வார்டு எண்.29 ரெட்டி தோப்பு 1வது தெரு, 2வது தெரு, 3வது தெரு மறறும் 4வது தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 42.50 | 1. ஏ.வி.நாகராஜன்<br>2.கே.ஜி.தீனதயாளன் | 4.95% மதிப்பீட்டை விட அதிகம்<br>5.47% மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | வார்டு எங்ண.29 ரெட்டி தோப்பு 5வது, குறுக்கு தெரு மறறும் மக்கா நகர் ஆகிய தெருக்களில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 23.50 | 1.எம்.தீனதயாளன்<br>2.ஏ.வி.நாகராஜன் . | 4.94% மதிப்பீட்டை விட அதிகம்<br>5.43% மதிப்பீட்டை விட அதிகம் |
| 7 | வார்டு 2 மற்றும் 3 கூபா மசூதி 1வது தெரு, 2வது தெரு, 5வது தெரு மறறும் வாத்திமனை 10வது குறுக்கு தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 37.50 | 1.கே.ஜி.தீனதயாளன்<br>2. ஏ.வி.நாகராஜன் | 4.93% மதிப்பீட்டை விட அதிகம்<br>5.20% மதிப்பீட்டை விட அதிகம் |
| 8 | வார்டு எண்.3 வாத்திமனை 4வது தெரு, 5வது தெருஇ 6வது தெரு, 9வது தெரு மற்றும் 7வது குறுக்கு தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 35.00 | 1.M/s.திவாகர் கன்ஸ்டிரக்சன்ஸ்<br>2.கே.ஜி.தீனதயாளன் . | 4.90% மதிப்பீட்டை விட அதிகம்<br>5.10% மதிப்பீட்டை விட அதிகம் |
| 9 | வார்டு எண்.35 சாது தெரு மற்றும் அண்ணாமலையார் தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 28.00 | 1.எம்.தீனதயாளன்<br>2.ஏ.வி.நாகராஜன் . | 4.94% மதிப்பீட்டை விட அதிகம்<br>5.10% மதிப்பீட்டை விட அதிகம் |
| 10 | வார்டு எண்.2 ஜலால்பேட்டை 2வது தெரு மற்றும் குறுக்கு தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 29.35 | 1.கே.ஜி.தீனதயாளன்<br>2. ஏ.வி.நாகராஜன் | 4.94% மதிப்பீட்டை விட அதிகம்<br>5.17% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்குறிப்பிட்டுள்ள சிப்பம் எண்.1 முதல் 10 வரையில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக உள்ளதால், குறைந்த விலைவிகிதம் (NEGOTIATION) வழங்குமாறு கூடுதலில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.16/2020/இ1, நாள்:25.02.2020 மூலம் தெரிவிக்கப்பட்டதில், தற்போது கட்டுமான பொருட்களின் விலை அதிகமாக உள்ளதாலும், வேலையினை செய்யும் பணியாட்களின் கூலித் தொகை அதிகமாக உள்ளதாலும், ஒப்பந்த விலை விகிதத்தை குறைத்து வழங்க இயலாதநிலை உள்ளது என சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் தமது 28.02.2020-ம் தேதிய கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதை பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** அ. 2019-20-ஆம் ஆண்டு 14-வது மத்திய நிதிக்குழு மான்ய திட்டத்தின்( 14th CFC) கீழ், எடுத்துக் கொள்ளப்பட்ட சிப்பம் எண்.1முதல் 10 வரையில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் மதிப்பீட்டிற்கு கூடுதலாக உள்ளது.மேற்படி பணிகள் திட்டப் பணிகளாக இருப்பதாலும், அரசு நிர்ணயித்துள்ள கால கெடுவிற்குள் பணிகளை முடிக்க வேண்டி இருப்பதாலும், அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும், நகராட்சி பொறியியல் நடைமுறை நூல்

பக்கம்.9ல் 2.7.2ல் தெரிவித்துள்ளவாறு, மதிப்பீட்டிற்கு 5சதவீதம் வரை ஒப்பந்தப்புள்ளி கூடுதலாக இருந்தாலும், ஒப்புதல் வழங்கலாம் என குறிப்பிட்டுள்ள காரணத்தை கருத்தில் கொண்டு, மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு மதிப்பீட்டை விட கூடுதலில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்த விலை விகிதங்களை அங்கீகரிக்கலாம்.

ஆ. மேற்படி திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாக ஏற்படும் செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

(ந.க.எண்.16/2020/இ1

தீர்மான எண்.31:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

4. இந்நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள 23 கணினிகள், 10 லேசர் பிரின்டர்கள், 2 Dot Matrix பிரின்டாகள், 10 ஸ்கேனர், 2 ஜெராக்ஸ் மிஷின், 3 Laptop, 10 KVA UPS - 2 எண்ணிக்கை, 20 பேட்டரி இவற்றில் ஏதேனும் பழுது ஏற்பட்டால் அதனை உடனுக்குடன் சரிசெய்ய வேண்டி இருப்பதால் அதனை 2020-2021-ம் ஆண்டு முழுவதும் பராமரிப்பு செய்ய தோராய செலவு ரூ.300000/-க்கு மன்றப் அங்கிகாரம் கோரப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி செலவினத்தை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்.520/2020/இ2**

தீர்மான எண்.32:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு பணிக்கு நகராட்சியில் தெருவிளக்கு மின்பணியாளர்கள் போதுமானதாக இல்லாததால் வார்டு எண்.01 முதல் 24 வரையுள்ள பகுதிகளுக்கான தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் தனியார் மூலம் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி பராமரிப்பு பணியினை 2020-2021-ஆம் ஆண்டு தனியார் மூலம் மேற்க்கொள்ள ஆகும் தோராய மதிப்பீட்டு தொகை ரூ.30.00 லட்சத்திற்கு (ருபாய் முற்பது லட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1.அங்கீகாரம் வழங்கலாம்.

2.மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 760/2020/இ2**

தீர்மான எண்.33:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

6. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்க்கொள்ள 06.03.2020-ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விவரம் | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருமதி | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையங்களான சாரங்கல், நரியம்பட்டு, ஆணைமடுகு (மாங்காய் தோப்பு) வண்ணாந்துறை, நதிசீலாபுரம் மற்றும் சாணிக்கணவாய் மேடு ஆகிய நிலையங்களில் உள்ள நீர் உறிஞ்சி கிணறு திறந்த வெளி கிணறு மற்றும் ஆழ்துளை கிணறு, மேலும் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி கிணறுகளில் உள்ள மின்மோட்டார் மற்றும் குழாய் வால்வுகளை இயக்குதல். (ஏப்ரல்.2020 முதல் செப்டம்பர்.2020 வரை). | 9.00 | 1.ஜி.பிரபாகரன்<br><br>2. எம்.தீனதயாளன் | 0.36% மதிப்பீட்டை விட குறைவு<br><br>0.50% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 9 எண்ணிக்கை மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு தலைமை நீர்ரேற்றும் நிலையங்கள் மற்றும் வேலூார் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக இந்நகராட்சி பகுதிக்கு தினசரி குடிநீர் விநியோகம் மேற்க்கொள்ள நீர்த்தேக்க தொட்டிகளில் நீரேற்றுவதை விநியோகம் செய்ய தேவைப்படும் குடிநீர் குழாய் திருகுநர் (வால்வு ஆப்ரேட்டர்) வால்வுகளை இயக்குதல். (ஏப்ரல்.2020 முதல் செப்டம்பர்.2020 வரை). | 9.00 | 1.ஜி.பிரபாகரன்<br><br>2. எம்.தீனதயாளன் | 0.36% மதிப்பீட்டை விட குறைவு<br><br>0.50% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:**அ. மேற்குறிப்பிட்டுள்ள பணிகளை குடிநீர் நிதி தலைப்பின் கீழ் மேற்க்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.

ஆ. மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப் புள்ளியினை வழங்கியுள்ள ஒப்பந்ததார் திரு. ஜி.பிரபாகரன் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

இ. மேற்கண்ட பணிகளின் அவசர அவசியத்தை கருதி, தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண். 518/இ2/2020**

தீர்மான எண்.34:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

ஓம்/-த.சௌந்தரராஜன்
தனி அலுவலர்
ஆம்பூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி